6. அரசினர் தீர்மானம்.

விதி 25 (1) இன் கீழ் பேரவைக் கூட்டங்களை ஒத்தி வைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையை ஒத்தி வைக்கக் கோரும் தீர்மானத்தை அவை முன்னவர் அவர்கள் இப்போது மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்தபடி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் இன்று முடிந்தபடியால், பேரவை இன்று ஒத்திவைக்கப்பெற்று மீண்டும் ஜூலைத் திங்கள் 2 ஆம் நாள் புதன் கிழமை காலை 11–00 மணிக்கு கூடலாம்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 2–7–1980 புதன் கிழமை யன்று காலை 11–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11.59 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

17. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல் முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 5–12–1979 ஆம் தேதியிடப் பெற்ற 2676 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டு தல். முறைப்படுத்துதல்) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

18. வேளாண்மைத் துறையில் 3–12–1969 ஆம் தேதியன்று வெளியாகி 11–2–1970 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு 1, பக்கங்கள் 184–189–ல் (ஆங்கிலத்தில்) வெளியான II–1 வேளாண்மை 633/1970 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மை,

துறையின் 4-1-1980 ஆம் தேதியிடப் பெற்ற 83780/AM. II/79. 7 ஆம் எண். அரசுக் கடிதத்தில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது[.

19. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 24-3-1980 ஆம் தேதியிடப் பெற்ற 273 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

20. சென்னை மாநகர் பகுதியில் மோட்டார் வண்டிகள் நிறுத்தபெறுவதை முறைப்படுத்துதல் மற்றும் கட்டணம் விதித்தல் சம்பந்தமாக தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக உள்துறையின் 13-1-1979 ஆம் தேதியிடப்பெற்ற 2815 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

21. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை கோவையின் பாகம் I ல் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணை கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்த (பணியாளரமைப்பு —M) துறையின் 9-5-1979 ஆம் தேதியிடப் பெற்ற 563 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

22. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறைக் கோவையின் பாகம் I ல் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்த (பணியாளரமைப்பு—M) துறையின் 30-11-1979 டம் தேதியிடப் பெற்ற 1303 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

23. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை கோவையின் பாகம் 1 ல் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்ணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத்

(பணியாளரமைப்பு) M துறையின் 15—10—1979—ஆம் தேதியிடப்பெற்ற 1168—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

24. ஒப்பந்த ஊர்திகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக உள் துறையின் 19—6—1958—ஆம் தேதியன்று வெளியாகி 9—7—1959—ஆம் தேதியிடப்பெற்ற தமிழ் நாடு அரசிதழ்ப் பாகம் 1 ல் 1195—ஆம் பக்கத்தில் வெளியானSRD எண் A—4416—ஆம் எண் அறிவிப்பினை ரத்து செய்வது குறித்து உள்துறையின் (போக்குவரத்து—1) 26—3—1980—ஆம் தேதியிடப்பெற்ற 942—ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1974—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் எதுவுமில்லை

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS